Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 03, 2023

திங்கட்கிழமை ஜூலை 03, 2023 | ஒளி: 09 கதிர்: 031 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | FREE

## இன்றையதினம் பட்டியல் இறுதி செய்யப்படும்



ஜூலை 1ஆம் திகதி முதல் அமலாகும் வகையில் சிகரெட் மற்றும் மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், மதுபான விலைப் பட்டியலை அந்தந்த நிறுவனங்கள் திங்கட்கிழமை (03) இறுதி செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### பிரபாகரனின் மரணம் குறித்து

## “எனக்கு எதுவும் தெரியாது”

### யாழில் ‘பல்டி’ அடித்தார் மைத்திரி

### வெளிநாட்டில் இருந்து மஹிந்தவே உத்தரவிட்டார்



நிதர்ஷன் வினோத்

தாமே இறுதி யுத்தத்தை நடத்தியதாகவும் விடுதலை புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தமக்கே பாரிய பங்கு உள்ளதாகவும் தெரிவித்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணம் தொடர்பாக, பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது, தமக்கு எதுவும் அறிக்கையிடப்படவில்லை என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், பிரபாகரனின் மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாகவும் தாம் அறிந்திருக்கவில்லை என்றார்.

பிரபாகரனின் மரபணுப் பரிசோதனைக்காக இராணுவத்தால் மாதிரி எடுக்கப்பட்டு, இறுதி யுத்தத்தில் மீட்கப்பட்ட உடல் அவருடையதே என்று உறுதி செய்யப்பட்டதாக இலங்கை இராணுவம் கூறியிருந்தது.

எனினும் அது தொடர்பான தகவல்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறுவதற்கு முயன்ற போதிலும் அதை இராணுவத்தினர் மறுத்திருந்தனர்.

தொடர்ச்சி P2



## தாய்லாந்துக்கு பறந்தது ‘முத்து ராஜா’

இலங்கைக்கு இன்றைக்கு 22 வருடங்களுக்கு முன்னர் தாய்லாந்து வழங்கிய ‘முத்து ராஜா’ அல்லது ‘சக்சுரின்’ யானை தாய்லாந்துக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை (02) அதிகாலை 3 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அந்த யானை கொண்டு வரப்பட்டது.

தொடர்ச்சி P2



### கொக்குத்தொடுவாயில் பெண் போராளிகளின் எச்சங்கள் மீட்பு?

# ஜூலை 6 அகழ்வு பணிக்கு உத்தரவு

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் பெண் போராளிகளின் மனித எச்சங்களை ஒத்த எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியில், ஜூலை 6 திகதி அகழ்வு பணியை முன்னெடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பகுதியில், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கடந்த வியாழக்கிழமை (29) கனரக இயந்திரம் கொண்டு நிலத்தைத் தோண்டியபோது, அங்கு மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, கொக்குளாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி P2

## சமர்ப்பிக்காவிடின் சட்ட நடவடிக்கை

தொழிற்சங்கத் தலைவர்கள் தமது சொத்து மற்றும் பொறுப்பு குறித்த தகவல்களை இதுவரை வழங்கவில்லை என்றும் எதிர்வரும் நாள்களில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## முதன்மை பணவீக்கம் ஜூனில் வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2023 மேயில் 25.2 சதவீதத்திலிருந்து 2023 ஜூனில் 12.0 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்ததாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### கிளிநொச்சியில்

## ஒரு வாரத்தில் நான்கு சிசுக்கள் மரணம்

மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்துக்குள் நான்கு சிசு மரணங்கள் இடம்பெற்றுள்ளதோடு, பிரசவத்துக்கு வந்த தாய் ஒருவரின் கருப்பையும் அகற்றப்பட்டுள்ள சம்பவம் பொது மக்களின் மத்தியிலும், சுகாதார ஊழியர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## லிட்ரோ விலைகள் நாளை குறையும்

லிட்ரோ வீட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் செவ்வாய்க்கிழமை (04) குறைக்கப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.




தொடர்ச்சி P2




## பொலிஸாரை தாக்கியோருக்கு விளக்கமறியல் நீடிப்பு

மன்னார், உயிலங்குளம் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை குறித்து கைது செய்யப்பட்ட 10 பேரையும் எதிர்வரும் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதவான் உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## ஜூனில் 1 இலட்சம் பயணிகள் வருகை

கடந்த மாதத்தில் சுமார் ஒரு இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2






## ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸை நடத்திச் செல்ல முடியாது

தொடர்ச்சியாக நட்டமடைந்து வரும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை, அரசாங்கத்தால் தொடர்ந்தும் நடத்திச்செல்ல முடியாது என்றும் மக்கள் பணத்தை வீணடிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை விரைவில் மறுசீரமைக்க தவறினால்,

தொடர்ச்சி P2



### மட்டக்களப்பு, குருக்கள்மடம்

## பாடசாலை காணியை விடுவிக்க இணக்கம்

பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு, குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலய காணி விடுவிப்பு தொடர்பிலான கள விஜயத்தின் போது, பாடசாலைக்குரிய காணியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## டயகம நகரில் புதிய மதுபானசாலை வேண்டாமென மக்கள் ஆர்ப்பாட்டம்

கௌசல்யா

தலவாக்கலை, டயகம நகரில், மதுபானசாலையை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, குறித்த பகுதியில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பெரியோர்கள், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) ஈடுபட்டுள்ளனர்.

‘200 வருடங்களாக மலையத்தை அழித்து வரும் மதுபானசாலையை அமைக்க நாம் இடம் தரமாட்டோம்’ உட்பட, பல்வேறு வாசகங்கள் ஏந்திய பதாகைகளை சுமந்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டயகம 3ஆம் பிரிவிலிருந்து ஆரம்பித்து டயகம் 2ஆம் பிரிவுக்கு அதாவது புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலை வரை பேரணியாக வந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# "எனக்கு எதுவும் தெரியாது"

இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் என்ற அடிப்படையில் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக மைத்திரிபால சிறிசேனவிடம் கேள்வி எழுப்பட்டுள்ளது.

இதற்குப் பதில் அளித்த மைத்திரிபால சிறிசேன, உண்மையில் தாம் இறுதி இரண்டு வாரங்களே பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்ததாகவும் இந்த மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக தாம் அறிந்திருக்கவில்லை எனவும் இன்றும் அது தொடர்பாக எந்தவொன்றும் தமக்கு தெரியாது எனவும் கூறியுள்ளார்.

எனினும் தாமே இறுதி யுத்தத்தை நடத்தியதாகவும் விடுதலை புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தமக்கே பாரிய பங்கு உள்ளதாகவும் ஜனாதிபதியாக இருந்த போது, மைத்திரிபால சிறிசேன கூறியமை தொடர்பாகவும் ஊடகவியலாளர் மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஜனாதிபதியாக இருந்த போது, இலங்கையின் சுதந்திர தின உரையிலும் மைத்திரிபால சிறிசேன, இந்த விடயத்தை கூறியிருந்ததையும் யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கு தொடர்ந்தும் பதில் அளித்த மைத்திரிபால சிறிசேன, அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, வெளிநாட்டில் இருந்த போதிலும் பாதுகாப்பு சார்ந்த உத்தரவுகளை அவரே வழங்கியிருந்தார் எனவும் எனினும் யுத்தத்தை வழிநடத்திய விடயத்தில் தமக்கு எந்தவொரு தொடர்பும் இருக்கவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்மிடம் பொறுப்புகளை கையளித்துவிட்டு, ஜனாதிபதி அப்போது வெளிநாடு சென்றிருந்தார் எனவும் முன்னெடுக்கப்பட்டுவந்த செயற்பாடுகளை தாம் தொடர்ந்ததாகவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இறுதி யுத்தத்தில் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்று மீண்டும் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் உயிரிழப்பு தொடர்பாக எந்தவொரு விடயமும் தமக்கு அறிக்கையிடப்படவில்லை என்று மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்திருந்தார்.

# இன்றையதினம் பட்டியல் இறுதி செய்யப்படும்

கலால் வரி உயர்த்தப்பட்டதை தொடர்ந்து இந்த விலை உயர்வுகள் அமல்படுத்தப்பட்டுள்ளது.

நான்கு வகைகளின் கீழ் சிகரெட் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், இதன்மூலம், சிகரெட்டின் விலை 5, 15, 20 மற்றும் 25 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அனைத்து வகையான மதுபான போத்தல்களும் 300 ரூபாயாலும் பியரின் விலை 50 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்துக்கு பறந்தது 'முத்து ராஜா'

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் இருந்து அதிகாலை சுமார் 12.00 மணியளவில், யானையை மிகவும் மெதுவாகவும், எந்த அசௌகரியத்தையும் ஏற்படுத்தாதும் விசேட வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டது.

இந்த யானை அடங்கிய சிறப்பு கூண்டு, தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லும் ரஷ்ய 'இல்யூஷன்-76' விமானத்தில் காலை 4.30 மணிளவில் ஏற்ற ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விமானம் காலை 07.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தாய்லாந்தின் பாங்கொக்கில் உள்ள Xianmai விமான நிலையத்திற்கு புறப்பட்டுச் சென்றது.

நாலாயிரம் கிலோ கிராம் நிறையைக் கொண்ட அந்த யானையை கொண்டு செல்வதற்காக ஒருவழி செலவாக 7 இலட்சம் டொலர் செலவிடப்பட்டுள்ளது என்று தாய்லாந்து தெரிவித்துள்ளது.

முறையாக பராமரிக்கப்படாமையை அடுத்தே அந்த யானை நோய்வாய்ப்பட்டது என்றும், யானையை தங்களுக்கு திரும்பித்தருமாறு தாய்லாந்து அரசாங்கம் இலங்கையிடம், 2022 ஆம் ஆண்டே கோரியிருந்தது.

# ஜூலை 6 அகழ்வு பணிக்கு உத்தரவு

இது தொடர்பாக வெள்ளிக்கிழமை (30) நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அன்றையதினம் மாலை 2.30 மணியளவில் நீதிபதி ரி.சரவணராஜா குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது, குறித்த மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியில் ஜூலை 6 திகதி அகழ்வு பணிக்கு நீதிபதி உத்தரவிட்டதோடு அதற்குரிய நபர்களுக்கான உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும் அதுவரை எச்சங்கள் அழிவடையாமல் பாதுகாக்குமாறும் கொக்கிளாய் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

இது பெண் போராளிகளின் தடயங்களாக காணப்படுகின்றன என்பதுடன், பெண்களின் உள்ளாடைகள், பச்சை சீருடைகள், எலும்பு எச்சங்கள் என்பன இதன்போது இனம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் மக்கள் மத்தியில் பாரிய ஐயம் எழுந்துள்ள நிலையில் குறித்த பகுதிக்கு நீதிபதி வருகை தந்தபோது, மனித உரிமைகள் சட்டத்தரணி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன், கிராம மட்ட அமைப்புகளின் தலைவர்கள், கிராம மக்கள் உள்ளிட்ட பலர் பிரசன்னமாகி இருந்தனர்.

## சமர்ப்பிக்காவிடின் சட்ட நடவடிக்கை

சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம், அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற நிறுவனங்களின் தொழிற்சங்கத் தலைவர்கள் தமது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை தொழில் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனும் நிலையில், தொழிற்சங்கத் தலைவர்கள் தமது சொத்து மற்றும் பொறுப்பு குறித்த தகவல்களை இதுவரை வழங்கவில்லை.

சொத்துகள் தொடர்பிலான விவரங்களை சமர்ப்பிக்குமாறு ஏற்கெனவே தொழிற்சங்க தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கிறது.

எவ்வாறாயினும், எந்தவொரு தொழிற்சங்கத் தலைவரும் இதுவரை அந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை என்றும் எதிர்வரும் நாள்களில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒரு வாரத்தில் நான்கு சிசுக்கள் மரணம்

சம்பவங்கள் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பிரசவத்துக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்கின்றனர். கடந்த வாரம் மாத்திரம் அவ்வாறு பிரசவத்துக்காக வருகை தந்த நான்கு தாய்மார்களின் சிசுக்கள் இறந்துள்ளதோடு, தாய் ஒருவரின் கருப்பையும் அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் எழுத்து மூலம் மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு முறைப்பாட்டுள்ளதோடு, மருத்துவர்களின் அக்கறையின்மை மற்றும் உரிய நேரத்தில் உரிய சிகிச்சைகளை வழங்காதுவிட்டமையே காரணம் என குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதாவது, மருத்துவக் காரணங்களால் தான் தங்களது குழந்தைகள் இறந்துள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர். மேலும் நான்கு குழந்தைகள் இறந்த தருணங்களிலும், பிரசவத்தாயாரது கருப்பை அகற்றப்பட்ட சந்தர்ப்பத்திலும் ஒரு குறித்த பயிற்சி மகப்பேற்றியல் வைத்திய நிபுணரே சம்பந்தப்பட்டிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இது தொடர்பில் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த முறைப்பாடுகள் தனக்கு கிடைத்துள்ளதாகவும், எனவே தாம் இது குறித்த ஆரம்பபுலன் விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## முதன்மை பணவீக்கம் ஜூனில் வீழ்ச்சி

முதன்மைப் பணவீக்கத்தில் இவ்வீழ்ச்சியானது, பரந்தளவில் இலங்கை மத்திய வங்கியால் 2023 ஏப்ரலில் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்க வீழ்ச்சிப் பாதைக்கு இசைவாக காணப்படுகின்றது.

இரு ஆண்டுகளுக்குப் பின்னர், உணவுப் பணவீக்கமானது 2023 மே மாதத்தில் 21.5 சதவீதத்திலிருந்து 2023 ஜூனில் 4.1 சதவீதம் கொண்ட ஒற்றை இலக்க மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் 2023 மேயில் 27.0 சதவீதத்திலிருந்து 2023 ஜூனில் 16.2 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம், 2023 ஜூனில் 0.02 சதவீதத்தைப் பதிவுசெய்தது.

இச்சிறிதளவு மாற்றத்திற்கு -0.39 சதவீதமாகவிருந்த உணவல்லா வகையிலுள்ள பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை வீழ்ச்சிகள் மூலம் 0.41 சதவீதமாகவிருந்த உணவு வகையில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புகளின் எதிரீடு காரணமாக அமைந்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் 2023 மேயின் 20.3 சதவீதத்திலிருந்து 2023 ஜூனில் 9.8 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

## லிட்ரோ விலைகள் நாளை குறையும்

இது அரசாங்கத்தின் எரிவாயு விலை சூத்திரத்தின் அடிப்படையில் தொடர்ந்து நான்காவது தடவையாக விலைக்குறைப்பு அமலாகவுள்ளது.

ஜூன் மாதம் 5ஆம் திகதியன்று, 12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாயால் குறைக்கப்பட்டது.

5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 181 ரூபாயாலும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 83 ரூபாயாலும் குறைக்கப்பட்டிருந்தது.

12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 3,186 ரூபாயாகவும், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,281 ரூபாயாகவும், 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 598 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

# பொலிஸாரை தாக்கியோருக்கு விளக்கமறியல் நீடிப்பு

குற்றச் செயல் தொடர்பாக பொலிஸார் சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்காக வீடு தேடிச் சென்றபோது, அவ்வீட்டிலிருந்த ஆண்கள், பெண்கள் இணைந்து பொலிஸாரை தாக்கியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை (24) மாலை மன்னார் உயிலங்குளம் மதுபானசாலைக்கு அருகில் சிலர் கலவரத்தில் ஈடுபடுவதாக பொதுமக்கள் சிலர், உயிலங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதைத் தொடர்ந்து, உயிலங்குளம் பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று விசாரணை செய்ததுடன், கலவரத்தில் ஈடுபட்டவர்களை அங்கு நின்றவர்கள் இனம் காட்டியுள்ளனர்.

இதற்கமைய பொலிஸார் சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்கு அவர்களின் வீட்டை நோக்கிச் சென்றிருந்தபோது, பொலிஸார் மீது அவ்வீட்டில் இருந்தவர்கள் சரமாரியாக தாக்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் காயங்களுக்கு உள்ளான பொலிஸார், மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக, ஐந்து ஆண்களும் ஐந்து பெண்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஞாயிற்றுக்கிழமை (25) மாலை மன்னார் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ரி.வினோதன் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, குறித்த 10 சந்தேகநபர்களையும் வெள்ளிக்கிழமை (30) வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் கட்டளை பிறப்பித்தார்.

இந்த நிலையில், குறித்த 10 சந்தேக நபர்களும் மீண்டும் வெள்ளிக்கிழமை (30) மன்னார் மாவட்ட பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது குறித்த 10 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## ஜூனில் 1 இலட்சம் பயணிகள் வருகை

இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் 6 இலட்சத்து 20 ஆயிரம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் 7 இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் குறைந்த எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகளே நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

2023 இல் இந்தியா மற்றும் ரஷ்யாவிலிருந்து தலா 1 இலட்சம் பேர் வருகை தந்துள்ளதுடன், ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தலா 1 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

மே மாதத்தில், பருவ காலம் இல்லாத போதிலும் 83,309 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன், ஜூன் மாதத்தில், இந்தியாவில் இருந்து அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதுடன், மொத்தம் 22,388 இந்தியர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

நாடு ஓரளவு நிலைபெற்றுள்ளதால், இந்த ஆண்டின் பிற்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் என்று சுற்றுலா அமைச்சு நம்புவதுடன், நாட்டுக்கு விளையாட்டு ரசிகர்களை ஈர்க்கக்கூடிய பல விளையாட்டு நிகழ்வுகளையும் இலங்கை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸை நடத்திச் செல்ல முடியாது

6 ஆயிரம் பேர் தொழிலை இழக்க நேரிடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைக்கும் பணிகளுக்கு சர்வதேச நிதி செயற்பாடுகள் தொடர்பில் நிபுணத்துவம் பெற்றவர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு நாளும் விமானங்களைக் கண்டிராத, விமானங்களில் காலடி வைக்க முடியாமல் இருக்கும் சாதாரண மக்களின் பணத்தினாலேயே இந்தச் சேவைகள் நடத்தப்படுவதாக குறிப்பிட்டார்.

எமக்கென தனியொரு விமான சேவை இருப்பது பெருமைக்குரியதாக இருந்தாலும், அதனை நடத்திச் செல்வதற்கான செலவு மிக அதிகமாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# பாடசாலை காணியை விடுவிக்க இணக்கம்

குருக்கள்மடம் இராணுவ முகாம் அமைந்திருக்கும் எல்லைக்குள், கலைவாணி வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணியை விடுவிப்பது தொடர்பாக ஆராயும் கள விஜயம் சனிக்கிழமை (01) மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது, குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலயத்துக்குச் சொந்தமான கட்டடங்கள், மைதானத்தில் இராணுவ முகாம் அமைந்திருக்கின்றமை தொடர்பில் தெரியப்படுத்தி, அக்கட்டடங்கள், மைதானத்தை மீண்டும் பாடசாலையிடம் ஒப்படைப்பது சம்மந்தமாக கோவிந்தன் கருணாகரம் எம்.பியால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு இணங்க, குறித்த இடத்துக்குச் சென்று, இராணுவத்தினருடன் எட்டப்பட்ட தீர்மானங்கள், அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு ஆளுநரால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக, களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விஜயத்தில் எம்.பி உட்பட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மண்முனை தென்எருவில் பற்றுப் பிரதேச செயலாளர், வலயக் கல்வி பணிப்பாளர், பாடசாலை அதிபர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி அங்கு பிரசன்னமாகி இருக்கவில்லை. இரண்டாம் நிலை அதிகாரி அங்கிருந்தார். அவருடன் கலந்துரையாடியதற்கு அமைவாக ஓர் அறிக்கை தயாரிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இராணுவம், அந்தப் பாடசாலை கட்டடங்கள் அடங்கிய 2.9 ஏக்கர் நிலப்பரப்பைப் பாவிப்பதற்கு மேலதிகமாக அரச காணி 5 ஏக்கரையும் பாவிக்கிறார்கள். எனவே பாடசாலைக்குரிய காணிகளை விடுத்து ஏனைய 5 ஏக்கரையும் பாவிப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்காதது அடுத்து பாடசாலைக்குரிய காணி, கட்டடங்களை விடுவிக்கும் படியாக நடவடிக்கையெடுப்பதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## பயகம நகரில் புதிய மதுபானசாலை வேண்டாமென மக்கள் ஆர்ப்பாட்டம்

ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் மூன்று மதுபானசாலைகள் இருக்கின்ற நிலையில், பயகம நகரில் மதுபானசாலைகள் எதற்கு என்றும் கேள்வியெழுப்பினர்.

பிரதேச இளைஞர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், சிறிய நகரமான பயகம நகரத்தில் ஒரு வங்கி வசதியோ, ஒரு சதொச நிலையமோ, எரிபொருள் நிலையமோ இல்லாதுள்ள நிலையில், மதுபானசாலைகள் அமைக்க காரணம் என்ன? கொழும்பில் இருந்து எமது பெற்றோருக்கு பணம் அனுப்பினால், அதனை அவர்கள் பெறுவதற்காக 200 ரூபாய் செலவிட்டு அக்கரப்பத்தனை நகருக்கே செல்ல வேண்டும்.

சில அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முடியாத அரசியல்வாதிகள், மதுபானசாலையை அமைக்க திட்டமிட்டிருப்பது ஏனோ? 200 வருடகாலமாக மலையகம் மதுபானத்தால் அழிந்தது போதும்; இனியும் வேண்டாம் இந்த நிலை.

மதுபான நிலையத்தை அமைத்துக்கொடுத்து, எம்மிடம் வாக்குப் பெற வேண்டும் என நினைப்பது முட்டாள் தனமாகும் என்றார்.

ஹந்தானை, பொகவந்தலாவையில்

# குளவிக்கொட்டு: 82 பேர் பாதிப்பு

ஷேன் செனவிரத்ன, ரஞ்சித் ராஜபக்ஷ

ஹந்தானை மற்றும் பொவந்தலாவையில் குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில், 82 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் 42 பேர் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொகவந்தலாவை செல்வகந்த தோட்டத்தில் தேயிலை பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது, குளவிகள் கலைந்துவந்து கொண்டியதால், பாதிக்கப்பட்ட 40 தொழிலாளர்கள் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை (01) இடம்பெற்ற இந்த சம்பவத்தில், பாதிக்கப்பட்ட 40 தொழிலாளர்களில் அறுவர், ஆண் தொழிலாளர்களாவர்.

ஹந்தானை மலையை ஏற வந்த ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் பீபே பல்கலைக்கழக மாணவர்கள் சனிக்கிழமை (01) குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 42 மாணவர்களில் 15 மாணவிகளும் 27 மாணவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

‘விதையனைத்தும் விருட்சமே’

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்



■ சண்முகம் தவசீலன்

சித்திரமேழி பழணியானந்தன் சனசமூக நிலையம், கருகம்பனை இந்து இளைஞர் கழகம் ஆகியவை இணைந்து முன்னெடுக்கும் ‘விதையனைத்தும் விருட்சமே’ என்ற செயற்றிட்டத்தின் ஊடாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 45 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு மூலமும் கவுணாவத்தை நரசிங்க வைரவர் கோவில் வருடாந்த உற்சவத்தின் போது சைக்கிள் பாதுகாப்பு நிலையம் நடத்தி பெற்றுக் கொண்ட நிதி என்பவற்றைக் கொண்டு, வடக்கு -கிழக்கு மாகாணங்களில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்றிட்டத்தின் முதலாவது நிகழ்வாக, மேற்படி நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளரும் ‘விதையனைத்தும் விருட்சமே’ அமைப்பின் முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளருமான ச. தவசீலன் தலைமையில் நடந்த நிகழ்வில், துணுக்காய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பா. காந்தரூபன், ஒட்டறுத்தகுளம் கிராம அலுவலர் தவரூபன், சித்திரமேழி பழணியானந்தன் சனசமூக நிலைய தலைவர் மு. நிறஞ்சன், ‘ஊடகவியலாளர் ஜெகதீஸ்வரன் டிசாந் ஆகியோர் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

புணானை குளப் பகுதியில் மண் அகழ்வு

# விவசாயிகளை பாதிப்பதால் அனுமதி மறுப்பு

■ ஆர். ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு, புணானை குளப் பகுதியில் மண் அகழ்ந்து, அதைக் கழுவி ஏற்றுமதி செய்யும் நிலையத்தை அமைக்கும் நடவடிக்கைக்கு, விவசாயிகளின் ஆட்சேபனை காரணமாக நீர்பாசன பொறியியலாளர் அனுமதி மறுத்துள்ளார்.

புணானை குளம் மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் காணப்படும் மண் அகழப்பட்டு, கழுவி வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அமைச்சின் சிபார்சு, ஓட்டமாவடி நபருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வேண்டி, நீர்பாசன திணைக்களம், வன இலகா திணைக்களம் போன்றவற்றை



நாடியிருந்தார்.

இதன் பொருட்டு, குறித்த குளப் பகுதிக்கு வெள்ளிக்கிழமை (30) அதிகாரிகள் சகிதம் சென்ற செங்கலடி, உறுகாமம் பிரதேச பொறியியலாளர் ந. விஷ்னுரூபன், நிலைமைகளை அவதானித்தார். இதன்போது, அங்கு கூடிய விவசாய கமநல அமைப்புகளின் பிரதிநிதிகள், இங்கு மண் அகழ்வு இடம்பெறுமானால் அதனால் ஏற்பாடும் பாதிப்பு தொடர்பாக விவசாயிகளினால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. விடயங்களை கேட்டறிந்து கொண்ட பொறியியலாளர், மாவட்ட அபிவிருத்தி குழுவில் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பாடதா வகையில் மண் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு அமைய அனுமதி வழங்க முடியாதுள்ளதாகவும் இது குறித்து தமது மேலதிகாரிக்கு அறிக்கை சமர்பிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

விடயத்தை கேட்டறிந்து கொண்ட விண்ணப்பதாரர், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் தாம் செயற்படபோவதில்லை என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, தமது விண்ணப்பத்தை மீளப் பெற்றுக் கொண்டார்.

ஒன்றிணைந்து செயற்படுவதால்

## சவால்களுக்கு சிறப்பாக தீர்வுகாண முடியும்

### கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ்

■ ஏ.எச்.ஏ ஹுஸைன்



“பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண செயற்பாடுகளுக்கு கனடா பங்களித்துள்ளதுடன், பொருளாதார மீட்சியை நோக்கிய இலங்கையின் பயணத்தில் தொடர்ந்தும் இலங்கையுடன் இருப்போம்” என, இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் தெரிவித்துள்ளார்.

ஜூலை முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படும் கனடா தினத்தையொட்டி வெளயிடப்பட்ட செய்திக் குறிப்பிலேயே அவர் இருதரப்பு உறவுகள் பற்றிய விவரங்களை வெளியிட்டுள்ளார் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையர்கள் வெளிவந்து, உள்ளடக்கமான, செழுமையான சமூகத்தில், எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கும், தமது உண்மையான ஆற்றலை அடைவதற்கும் தயாராகும் உண்மையான சந்தர்ப்பமாக இந்தக் கணத்தை நாம் பார்க்கின்றோம்.

கடந்த காலத்தின் கசப்பான உண்மைகளை எதிர்கொள்வதற்கும், நீண்ட கால அநீதிகளை அடையாளப்படுத்துவதற்கும் கனடா பணிகளைத் தொடர்கின்ற நிலையில், அர்த்தப்பூர்வமானதும், நீடிக்கும் தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய இலங்கையின் முயற்சிகளுக்கு எமது சொந்த அனுபவங்களில் இருந்து ஆதரவளிப்பதற்கும் தயாராக இருக்கின்றோம். முன்னோக்கிப் பார்க்கும்போது, நாம் கவனம் செலுத்த வேண்டிய புதிய மற்றும் நீண்ட கால முன்னுரிமைகள் எம்மிடம் உள்ளன.

கனடியக் கூட்டமைப்பின் 156ஆவது ஆண்டாகிய இந்த விசேட தினத்தில், உலகம் முழுவதிலும் வாழும் கனடிய மக்களின் சிந்தனைகள், பல கலாசார வாதத்தையும் வேற்றுமையில் ஒற்றுமையையும் முன்னேற்றம் என்பவற்றின் கலங்கரை விளக்காக நிற்பதனால் துடிப்பான சமூகம் என நன்கறியப்பட்ட சொந்த நாட்டை நோக்கிச் செல்கிறது. உலகில் வாழும் பலரின் ஒரு விருப்பத்தெரிவாக கனடாவை மாற்றிய விழுமியங்கள் குறித்தும் சிந்திக்கிறோம்.

எம் மக்களுக்கு இடையிலான பிணைப்புகள் மிகவும் ஆழமாக இருப்பதுடன், என் தாயகத்துடன் உறுதியான பிணைப்புகளைக் கொண்டுள்ள பலரின் மத்தியில் எமது தேசிய தினத்தை கொண்டாடுவதில் மகிழ்ச்சி கொள்கின்றேன். இலங்கையின் உறுதியான பங்காளராக பல தசாப்தங்களாக கனடா இருந்துள்ளமை குறித்து பெருமையடைகிறேன் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் உள்ளது.











### மடு மாதாவின் ஆடித் திருவிழா

மன்னார், மருத மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி ஞாயிற்றுக்கிழமை (02) காலை 6.15 மணி அளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கொழும்பு மறை மாவட்டத்தின் துணை ஆயர் அருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை, மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலியாக தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியில் அருட்தந்தையர்கள்,அருட் சகோதரர்கள், திணைக்கள தலைவர்கள் உள்ளடங்கலாக, இலட்சக்கணக்கான பக்தர்ககள் இம்முறை கலந்து கொண்டிருந்தனர். திருவிழா திருப்பலியை தொடர்ந்து, மடு அன்னையின் ஆசீர் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், 1924ஆம் ஆண்டு மருதமடு திருப்பதியில் மருதமடு அன்னைக்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு நிறைவு, யூபிலி பெருவிழாவாக எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொண்டாடப்படவுள்ளது. இதை முன்னிட்டு, மன்னார் மறைமாவட்ட ஆயரால் யூபிலி நூற்றாண்டு விழா பிரகடனம் செய்து வைக்கப்பட்டது. இதை வெளிப்படுத்தும் முகமாக, யூபிலி கொடியும் திருத்தலத்தின் முன்றலில் ஏற்றி வைக்கப்பட்டது.

எஸ். றொசேரியன் லெம்பேட்

## 2 தலைகள் மோதியதால் இருவர் கால்வாயில் பலி




கால்வாயில் பாய்ந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் இருவர், மரணமடைந்த சம்பவம், ஸ்ரீபுர திஸ்ஸபுர பகுதியில் சனிக்கிழமை (01) மாலை இடம்பெற்றுள்ளது.

கால்வாய்க்கு அருகில் இருந்த மரமொன்றில் ஏறி, கால்வாய்க்குள் குதித்துக்குதித்து விளையாடிக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில் 12 மற்றும் 15 வயதுகளையுடைய சிறுவர்கள் இருவரே மரணமடைந்துள்ளனர்.

மரத்திலிருந்து அவ்விருவரும் ஒரே நேரத்தில் பாய்ந்த போது, இருவரின் தலைகளும் மோதியதில், கால்வாய்க்குள் விழுந்து மீண்டெழ முடியாத நிலையில் அவ்விருவரும் மரணமடைந்துள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இருவருடன் நீந்திக் கொண்டிருந்த சுமார் 8 சிறுவர்கள், “அண்ணாமார்கள் இருவரும் எங்களைப் பயமுறுத்துவதற்காக தண்ணீருக்கு அடியில் ஒளிந்திருக்க வேண்டும்” என்று கூறி, தண்ணீரில் இருந்து வெளியே வந்து தங்கள் வீடுகளுக்குச் சென்று பெரியவர்களிடம் தெரிவித்தனர்.

அதன்பின்னர் ஓடோடிவந்து தேடிய போதே, இவ்விருவரின் சடலங்களும் நீருக்கு அடியில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

## ஆட்டுப்பட்டியில் இருந்து சிறுவனின் சடலம் மீட்பு

■ சுதத் எச்.எம்.ஹேலா

13 வயது சிறுவன், ஆட்டுப்பட்டியில் இருந்து இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் நோர்ட்டன் பிரிட்ஜ், கொத்தேலேன முருத்தன்வத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தமது வீட்டில் ஆட்டுப்பட்டியில் தொங்கிய நிலையிலேயே எனது மகன் சடலமாக சனிக்கிழமை (01) மாலை மீட்கப்பட்டுள்ளார் என அச்சிறுவனின் தாய் தெரிவித்தார்.

13 வயதான எஸ். பிரதாப்சின் என்ற சிறுவனனே உயிரிழந்துள்ளதாகவும், சடலம் பிரேத பரிசோதனைக்காக மஸ்கெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர்.



## ஹாலிஎல விபத்தில் ஒருவர் பலி: நால்வர் காயம்

■ ராமு தனராஜ்

பதுளை- பண்டாரவளை பிரதான வீதியின் ஹாலிஎல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (02) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 4 பேர் காயமடைந்துள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

எல்ல ஹல்பே பகுதியில் இருந்து பதுளை நோக்கி சென்றுகொண்டிருந்த காரொன்று ஹாலி எல பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் உள்ள பெரிய மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்த 52 வயதுடைய நபர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த பெண்கள் இருவரும், இரண்டு சிறுவர்களும் சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்

பதுளை போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டொக்டர் பாலித ராஜபக்ஷவிடம் வினவிய போது இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இரு பெண்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவித்தார்.

பதுளையில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு சென்ற போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.



## கல்வீடு கையளிப்பு

■ வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட பலாச்சோலைக் கிராமத்தில் மூன்று பிள்ளைகளுடன் ஓலைக் குடிசையில் வசித்து வந்த சுந்தரலிங்கம் தரிசினியின் குடும்பத்துக்கு இலண்டனில் தலைமையகத்தைக் கொண்டு செயற்பட்டுவரும் ‘ஸ்ரீ லங்கன் பெமிலி செரண்டிப் பவுண்டேன்’ எனும் அமைப்பால் 12,65,000 ரூபாய் பெறுமதியான கல்வீடு அமைக்கப்பட்டு, குடும்பத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை (28) நடைபெற்றது.

## பள்ளமடுவில் கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சா மீட்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு வீதியில் வைத்து 85 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் இருவர் சனிக்கிழமை (01) (01) மாலை கைது செய்யப்பட்டனர்.

மன்னார் மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற போது, வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய 85 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட இருவரும் 35 வயதுடைய பேசாலை, புதுக்குடியிருப்பு பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.



மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்களும் மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள், வாகனம், மோட்டார் சைக்கிள் ஆகியவை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# தன்னுயிரை மாய்த்துக்கொள்ளுதல் பிரச்சினைக்குத் தீர்வாகாது

ஒவ்வொரு விடயத்தையும் புரிந்துகொள்ளுதல், பிரச்சினைகள் தொடர்பில் மனம் விட்டு கலந்துரையாடுதல், தங்களுக்குள்ளே விவாதித்துக் கொள்ளுதல் இன்றேல், ஆலோசனைகளை கேட்பதன் மூலமாக, மனப்பாரம் ஓரளவுக்கேனும் குறைந்துவிடும்; பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

“தோல்விகளை, வெற்றிக்கான படிக்கற்களாக மாற்றிக்கொள்ளவேண்டும்” எனப் பலரும் கூறுவார்கள். ஏனெனில், தோல்விக்கான காரணத்தை தேடியறிந்தால், அதே தவறை மீண்டும் செய்யமாட்டோம். அதேவேளை, செய்த தவறையே மீண்டும், மீண்டும் செய்து தோற்றுவிட்டால், புரிதலே இல்லை என்பதே அர்த்தமாகும்.

ஒவ்வொரு பிரச்சினைக்கும் கட்டாயம் தீர்வு இருக்கிறது. உடனடியாக அல்லது, நீண்டகாலத்தின் பின்னரேனும் தீர்வு கிட்டும். அதுவரையிலும் பொறுமையாக காத்திருக்க வேண்டியது கட்டாயமாகும். இன்றேல், உள ரீதியிலான பாதிப்புகளுக்கு உள்ளாகி, ஆபத்தான முடிவுகளையே பலரும் எடுத்துவிடுகின்றனர்.

“இலங்கையில், 2023 இல், ஏப்ரல் மாதத்துக்குள் தன்னுயிரை மாய்த்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது” என மனநல மருத்துவ ஆலோசகர் டொக்டர் சத்துரி சுரவீர தெரிவித்திருக்கின்றார்.

“இலங்கையில் சுமார் 3,000 தற்கொலை வழக்குகள் வருடாந்தம் பதிவாகின்றன, ஒவ்வொரு நாளும் சுமார் எட்டு முதல் ஒன்பது வழக்குகள் பதிவாகின்றன” என்றும் தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கையின் ஸ்திரத்தன்மையின்மை ஆகியவற்றின் விளைவால், மக்கள் அனுபவிக்கும் பொருளாதார அவலநிலை காரணமாக, தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளுதல் அதிகரிப்பதற்கான வெளிப்படையான காரணங்களாக உள்ளன.

கடந்த ஆறு மாதங்களுக்குள் பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஐவர், தங்களுடைய உயிரை மாய்த்துக்கொண்டுள்ளனர். இந்த விவகாரம் பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. மன அழுத்தம் காரணமாகவே, மாணவர்கள் இவ்வாறான முடிவை எடுத்துள்ளனர் என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டு இருந்தது.

இதைவிட, பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் மத்தியிலும், தன்னுயிரை மாய்த்துக்கொள்ளுதல் அதிகரித்துள்ளது. விபரீதமான விளையாட்டுகளால் மரணிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

ஊஞ்சலில் இறுகி, தண்ணீரில் மூழ்கி மரணிக்கும் சம்பவங்களுக்கும் குறைவில்லை. இந்த விவகாரத்தில், பெற்றோர்கள் கடும் விழிப்பாக இருக்கவேண்டும். தங்களுடைய பிரதேசங்களில் இருக்கும் ஆபத்தான இடங்களுக்கு தனியாகவோ, நண்பர்களுடனோ செல்வதை தடுக்கவேண்டும்.

வெற்றி - தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை சிறிய வயதில் இருந்தே ஊட்டி வளர்க்கவேண்டும். தோல்வியால் ஏற்படும் அனுபவங்களை பகரவேண்டும். வெற்றிக்கு கரகோஷம் எழுப்புவதைப் போல, தோல்வியின் போது தட்டிக்கொடுக்க வேண்டும். அப்போதுதான் சிறுவர்களிடத்தில் தன்னம்பிக்கை பிறக்கும்.

வாழ்க்கையின் நோக்கத்தை தெளிவுபடுத்த வேண்டும். போட்டி இருக்கவேண்டும்; பொறாமை இருக்கக் கூடாதென அறிவுரை கூறவேண்டும். அதேபோல, குடும்ப உறுப்பினர்களும் தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாது, தன்னம்பிக்கையுடன் முன்னகர வேண்டும். அதுவே, வாழ்க்கைக்கு ஒளியூட்டும்; மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமையும். தன்னுயிரை மாய்த்துக்கொள்ளுதல் ஒருபோதும் தீர்வாகாது என்பதை வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எடுத்த எடுப்பிலேயே சிலர் முடிவுகளை எடுக்கின்றார்கள். நெஞ்சத்துக்கு இடம் கொடுப்பதில்லை.

சிந்தனை என்பது, தன்னைத் தானே உணரவைப்பதாகும். ஆயினும் பெரியோர், அறிஞர்கள், ஆன்மிகவாதிகள் ஆகியோரின் அறிவுரைகளையும் கேட்க வேண்டும்.

சுய அறிவு சகலருக்கும் உண்டு. ஏற்றதாழ்வுகளைத் தாங்களே உருவாக்குகின்றார்கள். திடீரென அறிவுத் தேட்டம் பெறுவது சிரமம். ஆனால், அறிவு பெற நிறைய அனுபவங்கள் தேவைப்படுகின்றன.

தங்கள் பலத்தை வளர்க்காமல், சோம்பல்படலாகாது. பிறரின் வளர்ச்சிபோல், தங்களாலும் முடியும் என திடமான எண்ணங்களை நெஞ்சில் நிறுத்துக!

மிகவும் வறுமையிலும் துன்பத்திலும் வாழ்பவர்களும், கண் முன்னே உயர்ந்து நிற்பதைக் கண்டிருப்பீர்கள். வளர்ச்சி யாவருக்கும் பொதுவானதே ஆகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

‘இலவச’ பல்கலைக்கழக கல்வி

# கொள்கையில் மாற்றம் வேண்டும்




என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


இன்றைய ‘இலவச’ பல்கலைக்கழக கல்விக் கொள்கையில் மாற்றம் வேண்டும் என்ற வார்த்தைகளை உச்சரித்தாலே சிலர், போர்க்கொடி தூக்கிவிடுகிறார்கள். ஒருவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரிந்துகொள்ளாமலேயே, போர்க்கொடி தூக்குவது என்பது அறச்சீற்றமல்ல; அறமற்ற சீற்றம்.

“எதற்கெடுத்தாலும் போராடுவோம்; நாம் கொண்ட நம்பிக்கைகள், கொள்கைகள் என்பவற்றுக்கு எதிரான, நியாயமான விமர்சனங்களைக் கூட ஏற்றுக்கொள்ள மாட்டோம்” என்பது பாசிஸ மனநிலை. இடதுசாரிகளுக்கும் பாசிஸவாதிகளுக்கும் இந்த விடயத்தில் பெரிய வித்தியாசம் கிடையாது. ஹிட்லரின் பாசிஸவாத நாஸிக் கட்சியின் முழுப்பெயர் ‘தேசிய சோசலிச ஜேர்மன் தொழிலாளர் கட்சி’ என்பதாகும். நிற்க!

இன்றைய ‘இலவச’ பல்கலைக்கழக கல்விக் கொள்கையில் மாற்றம் வேண்டும் என்று சொல்வதற்கு, நிறையக் காரணங்கள் இருக்கின்றன. ஆனால், இப்படிச் சொல்வதன் அர்த்தம், வரி செலுத்துபவர்களால் வழங்கப்படும் ‘இலவச’க் கல்வியை இல்லாதொழிக்க வேண்டும் என்பதல்ல.

மாறாக, வரி செலுத்துபவர்களின் வரிப்பணத்தில் வழங்கப்படும் ‘இலவச’க் கல்வியானது, நாட்டுக்கு நன்மை பயக்கும் விதத்தில் அமைய வேண்டும் என்பதாகும்.

இன்றைய சூழ்நிலையில், இலங்கை பெரும் ‘மூளை’ வெளியேற்றத்தைச் சந்தித்து நிற்கிறது. இலங்கையின் திறமையான ‘மூளை’கள், அதாவது மனிதவளம், இலங்கையை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது. இது இலங்கைக்கு பேரழிப்பாகும். இந்தப் பேரிழப்பின் பிரதிபலனாக, இலங்கை நீண்டகாலத்தில் மிக மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

இதுவரை காலமும், வெளிநாட்டவர்களுக்கு சுற்றுலா விசா வழங்குவதற்குக் கூட பின்னின்ற கனடா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள், தற்போது அங்கு எழுந்திருக்கும் மனிதவளப் பற்றாக்குறை காரணமாகவும், எதிர்கால மனிதவளத் தேவைகள் காரணமாகவும், ஒப்பீட்டளவில் குறைந்த சம்பளத்துக்கு திறமையான மனிதவளத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் என, திறமையான மனிதவளத்துக்கு வாரி வாரி விசா வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது இலங்கையின் ‘மூளை’ வெளியேற்றத்தை மிகத் தீவிரமாக அதிகரித்திருக்கிறது. இன்றைக்கு வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணினி வல்லுனர்கள், விஞ்ஞானத்துறை சார்ந்தவர்கள், நிதித்தறை வல்லுனர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், தாதியர்கள் என இலங்கையின் சிறந்த ‘மூளைகள்’ எல்லாம் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, வைத்தியர்களின் வெளியேற்றம், இலங்கையின் சுகாதாரத்துறையை தள்ளாட வைத்துக்கொண்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், இலங்கையின் ‘இலவச’ பல்கலைக்கழக கல்வியில் இடம் கிடைத்து, மருத்துவம் படித்தாலன்றி, இலங்கையில் மருத்துவராவது என்பது மிகக்கடினமானதொரு காரியம். அப்படியான ஒரு கட்டமைப்பைத்தான் இலங்கை வைத்தியத்துறையும் வைத்தியர்களும் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

‘இலவச’ பல்கலைக்கழக கல்வி என்பது, இலங்கையை பொறுத்தவரை மிக மட்டுப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றிருப்பினும், பல்கலைக்கழகத்தில் இருக்கைகள் மிகக்குறைவு. ஆகவே, ‘இலவச’ பல்கலைக்கழக கல்விக்கான அனுமதி என்பது, மிகப் போட்டிமிக்க ஒன்றாக இருக்கிறது. உயர்தரப் பரீட்சை என்பதே, அதைத் தீர்மானிக்கும் விடயமாக அமைகிறது. இதன் பொருத்தப்பாடுகள் பற்றி நிறைய வாதப்பிரதிவாதங்கள் இருக்கின்றன. அது வேறொரு தனித்த ஆய்வுக்கானது.

இங்குள்ள மாவட்ட தரவரிசை முறையிலான ‘ஸட் ஸ்கோர்’ வெட்டுப்புள்ளியின்படி, சிலவேளைகளில் கொழும்பில் கல்வி கற்ற மாணவனொருவன் 3 ஏ சித்திகளைப் பெற்றாலும், அவனுக்கு மருத்துவம் கற்க வாய்ப்புக் கிடைக்காது. இதனால் 3 ஏ சித்திகளைப் பெற்ற மாணவன் அறிவு குறைந்தவன் என்று அர்த்தமல்ல. ஆனால் இதுதான் நியதி.

மேலும், உயர்தரத்தில் உயர்சித்தி பெற்ற ஒருவன்தான், எந்தத் துறையிலும் சாதிக்க வல்லான் என்பதும் பிழையான ஒரு சிந்தனை. ஆகவே, பல்கலைக்கழகம் செல்லத் தகுதிபெற்றும், பல்கலைக்கழகம் செல்ல முடியாதவனுக்கு மாற்றுவாய்ப்புகள் உருவாக்குவதில் பெருஞ்சிக்கல்களும் தடைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

தனியார் மருத்துவக் கல்லூரிகளை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டபோதெல்லாம், இலங்கையின் வரிப்பணத்தில் கல்வி பெறும் அரச பல்கலைக்கழக மாணவர்களும் வைத்தியர்களும் வைத்தியர்களின் தொழிற்சங்கமும் அதைக் கடுமையாக எதிர்த்து, ஆரம்பிக்கப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரிக்கு மூடுவிழா நடத்தினார்கள்.

அதுபோல, வெளிநாட்டுக்குச் சென்று மருத்துவக் கல்வி கற்று வந்தவர்கள், இங்கு மருத்துவராவதற்கான பரீட்சையை மிகக் கடுமையாக்கி, அவர்கள் மருத்துவராக இங்கு பணிபுரிவதை எவ்வளவுதூரம் தடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் தடுத்தார்கள்; தடுக்கிறார்கள். வெளிநாட்டில் கல்வி கற்றுத் திரும்பிய பல மருத்துவ பட்டதாரிகளும், தமது உரிமைகளை ஒவ்வொருமுறையும் நீதிமன்றம் சென்று பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையை இலங்கை மருத்துவ சபை உருவாக்கி வைத்திருக்கிறது.

சரி! இலங்கை மக்களின் வரிப்பணத்தில் படித்துவிட்டு, மற்றவர்கள் துறைக்குள் நுழைவதற்குப் பல தடைகளையும் உருவாக்கி இருப்பவர்கள், குறைந்தபட்சம் தாமாவது தொடர்ந்து அந்தத் துறையிலிருந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டாமா?

இன்று, இலங்கையின் பொருளாதாரா நிலை கொஞ்சம் மோசமானதும், மற்ற நாடுகளைப் போல் சாதாரணமான அளவுக்கு வருமான வரிகள் கொண்டுவரப்பட்டதும், நாட்டை விட்டு ஓடுவதென்பது என்ன நியாயம்? அப்படியானால் இவர்களின் பாடசாலைக் கல்விக்காகவும், மருத்துவப் படிப்புக்காகவும் செலவழித்த மக்களின் வரிப்பணத்துக்கு என்ன பிரதிபலன் கிடைக்கப் போகிறது?

இந்த இடத்தில்தான், இன்றைய‘இலவச’ பல்கலைக்கழக கல்விக் கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியம் உணரப்படுகிறது.

இலங்கையில் இலவசமாக, அதாவது மக்களின் வரிப்பணத்தில் வழங்கப்படும் மருத்துவப் பட்டப்படிப்பின் பெறுமதி, ஒரு மாணவனுக்கு சில கோடி ரூபாய் அளவிலேனும் மதிப்புடையது. இந்தியா, பங்களாதேஷ், சீனா, ரஷ்யா, பெலாரஸ் என்று வெளிநாடுகளுக்கு சென்று மருத்துவம் படிக்க, சில கோடி ரூபாயேனும் அவசியமாகிறது. முழு மருத்துவக் கல்வி, தங்குமிடம், மானிய விலையில் உணவு, ‘மஹபொல’ புலமைப்பரிசில் என வழங்கப்படும் சலுகைகள் எல்லாம், மக்களின் வரிப்பணத்தில் வழங்கப்படுகின்றன.

இதற்காக நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்கும் பிரதிபலன் என்ன? அதுதான் இங்கு முக்கிய கேள்வி. இது, எவரும் தமது எதிர்காலத்தைச் சுதந்திரமாகத் தீர்மானிக்கும், தாம் எங்கு, எப்படி வாழ வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையைத் தடுப்பது பற்றியதல்ல; மாறாக, ‘இலங்கை’ தனது மனிதவள மேம்பாட்டுக்காகத் தனது வரிப்பணத்தை முதலிட்டுள்ளது. அதன் பயன் இலங்கைக்குக் கிடைப்பதை இலங்கை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

இலங்கையின் வரிப்பணத்தில் கல்வியைப் பெற்றுவிட்டு, கனடா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று, அங்கு மக்களுக்கு சேவையாற்றுவதால், இலங்கைக்கு எந்த நன்மையும் இல்லை.

ஆகவே, தனது முதலீட்டுக்கான பயன், இலங்கைக்கு கிடைக்கும் வகையில் இலங்கையின் ‘இலவச’ பல்கலைக்கழக கல்விக் கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

இலங்கையின் மக்கள், வரிப்பணத்தில் கல்விகற்றால், குறைந்தது 20 வருடங்களாவது இலங்கை மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். இல்லையென்றால், குறித்த பட்டப்படிப்பின் சந்தைப்பெறுமதியை, வட்டியோடு மீள்செலுத்திவிட்டு எவரும் வெளிநாடு போகலாம் என்பது போன்ற நிபந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும். இல்லையென்றால், இலங்கை தனது வரிப்பணத்தை முதலிட்டுக் கொண்டேயிருக்க, அதன் பயன் வெளிநாடுகளுக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கும். வெளிநாடுகளின் மக்களின் நன்மைக்காகவா எமது மக்களின் வரிப்பணம் முதலிடப்படுகிறது?

அரசியல்வாதிகள் கொள்ளை அடிக்கிறார்கள்; ஊழல் செய்கிறார்கள்; அதிகாரிகள் ஊழல் செய்கிறார்கள்; நாட்டைச் சுரண்டுகிறார்கள் என்ற பெருங்கூச்சல் இங்கு ஒலித்துக்கொண்டிருக்கிறது. அரசியலிலும் அதிகாரத்திலும் ஊழல் என்ற பெருநோய் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை; அதை மாற்ற வேண்டும்.

ஆனால், இலங்கையின் மக்கள் வரிப்பணத்தில் படித்துவிட்டு, அதுவும் இன்னொருவனுக்கான வாய்ப்பை தான் பெற்றுப் படித்துவிட்டு, அந்த நாட்டுக்கும் மக்களுக்கும் அதன் பயனைத் திருப்பித்தராது, சுயநலத்துக்காக வெளிநாடு போகும் இவர்களுக்கும், நாட்டைச் சுரண்டும் அதிகார மட்டத்துக்கும் பெரிய வேறுபாடு இருக்கிறதா என்ன? இருவரும் இந்நாட்டின் வளங்களை, தமது சுயநலத்துக்காகச் சுரண்டிக்கொள்கிறார்கள்.

இந்த நியாயங்களைப் பற்றிப் பேசினாலே, பேசுகிறவனை குற்றவாளிபோல பார்ப்பது என்பது, இந்தச் சமூகம் எவ்வளவு தூரம் ‘மூளைச்சலவை’ செய்யப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

‘இலவச’க் கல்வி என்பது, இலவசமானது அல்ல; அது மக்களின் வரிப்பணத்தில் வழங்கப்படுவது. அதற்கான பிரதிபலன் மக்களுக்கும் நாட்டுக்கும் கிடைக்கும் வகையில் கொள்கை வகுக்கப்பட வேண்டும். இந்த மாற்றம், உடனடியாக நிகழ்த்தப்பட வேண்டும்.

## கடிதங்கள்

### இறங்கு துறைகளை ஆழப்படுத்துமாறு வேண்டுகோள்

கிளிநொச்சி மாவட்டத்தின் நாச்சிகுடா, பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளில் 4,186 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 16,931 அங்கத்தவர்கள் வாழ்கின்றனர்.

குறித்த பிரதேசங்களில், 5,170 கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அதாவது, இயந்திரமயமாக்கப்படாத 266 படகுகளும் பாரம்பரிய இயந்திர மயமாக்கப்பட்ட 131 படகுகளும் வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட 1,112 படகுகளும் தொழில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

குறித்த கடல் கலங்களையும் கடற்றொழில் உபகரணங்களையும் கடற்றொழிலுக்கு நாளாந்தம் கொண்டு செல்வதற்கும் தொழிலுக்குச் சென்று திரும்புவதற்கும் ஏற்ற வகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் எந்த இறங்குத்துறைகளும் இல்லாத நிலையில், கடற்றொழிலுக்கு சென்றுவரும் கடற்றொழிலாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பகுதிகளில் இறங்கு துறைகளை அமைத்துத் தருமாறு தொடர்ச்சியாக மீனவ சமூகங்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையிலும், இதுவரை குறித்த பகுதி இறங்கு துறைகள் புனரமைக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில், இறங்கு துறைகளை புனரமைப்பதற்கான மதிப்பீடுகள் செய்யப்பட்டு, உரிய திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதாகவும் அதற்கான நிதி கிடைக்காமையால் அவற்றை அபிவிருத்தி செய்ய முடியவில்லை எனவும் மாவட்ட உதவி பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, நான்கு பிரிவுகளிலும் உள்ள 21 வரையான இறங்குதுறைகளையும் 5.7 கிலோ மீற்றர் நீளமான கடல் பகுதியையும், படகுகளை கரை சேர்க்கக் கூடிய வகையில் ஆழப்படுத்தி, புனரமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யது பாஸ்கரன்



# “முயன்றால் முடியாதது எதுவுமில்லை”



உதயகுமார் ரதிகலா
ஊடக கற்கைகள் துறை
யாழ் பல்கலைகழகம்
இரண்டாம் வருடம்

மனிதனுக்கு உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் எவ்வளவு முக்கியமானதோ, அதே போன்று தான் கல்வியும்! "நீரின்றி அமையாது உலகு " என்பது போல இன்று கல்வி இன்றி அமையாது உலகு என்று தற்காலப் போக்கு மாறிவிட்டது. கல்வி என்பது தகைமை, அறிவு என்ற நிலைகளைக் கடந்து இன்று போட்டி உலகுக்குள் தள்ளப்பட்டுள்ளது. கல்வி என்ற அலகு விரிவடைந்து மாபெரும் துறையாக வளர்ந்து நிற்கின்றது. மாணவர்களும் போட்டி உலகுக்குள் உந்தப்பட்டுள்ளார்கள் என்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். வர்த்தகம், கலை, விஞ்ஞானம், தொழில்நுட்பம் ,கணிதம் என பல்வேறு பிரிவுகளுக்குள் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதிலும் ஆரம்பகாலம் முதல் இன்றைய காலம் வரை நிலைத்து நிற்கக்கூடிய துறையாக கலைத்துறை காணப்படுகின்றது.

கலைத்துறை என்பது இன்றைய காலத்தை பொறுத்தவரையில் பல சவால்களை எதிர்கொண்டு முன்னேறி செல்லும் துறையாக காணப்படுகின்றது. கலைப் பிரிவு மாணவர்களும் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்த வண்ணம்தான் கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லா சமூக மட்டங்களையும் உற்று நோக்கினால் கலைப்பிரிவு என்பது இன்றைய போட்டி உலகுக்கு தேவைதானா என்ற வினாவே அதிகமாக எழுப்பப்படுகின்றது. மேலும் கலைப்பிரிவில் ஏதாவது ஒரு பாடத்தை தெரிவு செய்து அதன் மூலம் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில்லை என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் அதனை நிரூபிக்கும் வகையில் கலை பிரிவு மாணவர்களே வீதிகளில் இறங்கி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

கலைப்பிரிவு என்பது இன்று வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப உலகிற்கு அத்தியாவசியமற்ற ஒரு துறையாகவே பார்க்கப்பட்டு வருகின்றது. இன்றைய பெற்றோர்கள் கூட தமது பிள்ளைகளை கலைப்பிரிவுக்குள் நுழைவதற்கு அனுமதி அளிக்காத ஒரு நிலைமையே இங்கு காணப்படுகின்றது. மேலும் மாணவர்களும் தமது எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும் என்ற அச்சத்தில் பெரும்பாலான மாணவர்கள் தாம் கலை பிரிவுக்குள் நுழைவதற்கான தகைமை விருப்பம் இருந்தும் அதற்குள் நுழைவதற்கு அச்சப்படுகின்றார்கள். இவ்வாறு தமக்கு விருப்பமில்லாத ஏதாவது ஒரு துறைக்குள் நுழைந்து கொண்டு அதனை பின்தொடர முடியாமல் பாதியிலேயே விட்டுவிடும் பிள்ளைகளும் இருக்கின்றார்கள்.

கலைத்துறைக்குள் நுழைந்து எப்படியாவது சாதித்து விடலாம் என்ற எண்ணப்பாட்டில் இருக்கும் மாணவர்களுக்கும் இந்தச் சமூகம் அதற்கான சரியான வழியமைத்து கொடுப்பதில்லை. தான் எடுத்த துறைக்குள் நுழைவதற்கு முன்பாகவே இந்தச் சமூகம் பல்வேறு விமர்சனங்களை அவர்கள் மேல் விதைக்கின்றது. கலை பிரிவுக்குள் சென்று உங்களால் எதிர்காலத்தில் ஒரு வேலைக்கு செல்ல முடியுமா? ஏன் வேறு துறைகளில் கல்வி கற்கலாமே? வரலாறு பாடமா ஏன் பழையதை படிக்கின்றீர்கள்? தமிழ் தற்போதைய உலகிற்கு தேவை இல்லைத்தானே? பட்டப்படிப்பை நிறைவு செய்த பின் வீட்டில் தானே இருக்கப் போகின்றீர்கள் என்றவாறு பல கேள்விகளை கொடுத்து மாணவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்குகின்றார்கள். மேலும் படிக்கின்ற மாணவர்களும் தமது எதிர்காலம் என்னவாகும் வேலை கிடைக்குமா முன்னேறி விட முடியுமா என்ற ஐயப்பாட்டிலேயே தமது கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள் . விஞ்ஞானம், வர்த்தகம் , தொழில்நுட்பம், கணிதம் ஆகிய துறைகளுக்குள் தைரியமாக கால் எடுத்து வைக்கும் மாணவர்கள் கலை பிரிவுக்குள் சற்று தயக்கத்துடனே கல்வியை தொடர்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டுமாயின் கலை பிரிவை வலுவான துறையாக மாற்றியமைக்க வேண்டும். கலை பிரிவுகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை எல்லா பாடசாலைகளிலுமே பூர்த்தியாக வேண்டும். கலைப்பிரிவு மாணவர்களை எல்லா வகையிலும் தகைமை உள்ள மாணவர்களாக மாற்றியமைப்பதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

கலை பிரிவு மாணவர்களுக்கு மனனம் செய்து ஒப்புவிப்பதை தவிர வேறு எதுவுமே தெரியாது என்ற நிலைப்பாட்டை மாற்றி அமைக்க வேண்டும். அம் மாணவர்களுக்கு தேவையான கணினி அறிவு, ஆங்கில அறிவு என்பவற்றை முறையான விதத்தில் வழங்க வேண்டும். அது மட்டுமல்லாது அத்தோடு சேர்ந்து எல்லா தொழில்துறைகளிலும் வேலை செய்யக்கூடிய தொழில் பயிற்சிகளையும் வழங்க வேண்டும். கலைப் பிரிவு என்பது சமூகத்திற்கு தேவையான முக்கியமான துறை தான் என்று அழுத்தமாக சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு மாணவர்களும் தங்களது பெறுபேறுகளை எவ்வாறான நிலையில் ஏற்றுக்கொள்கின்றார்கள் என்ற நிலையிலும் பார்க்க அவர்களின் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகத்தில் உள்ளவர்கள் பலவிதமான கருத்தாடல்களை முதலில் முன்வைக்கின்றனர். வருடந்தோறும் 4 இலட்சத்திற்கு அதிகமான மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். எனினும் அதில் 50 அல்லது 60 வீதமானவர்களே சிறந்த பெறுபேற்றினை பெற்று உயர்தரத்திற்கு தகுதியானவர்களாகின்றனர். இந்நிலையில் சில பெற்றோர்கள் தமது சுய அந்தஸ்திற்காகவும் , சமூகத்தினரின் கருத்தாடல்களுக்கு பயந்தும் பிள்ளைகளை விருப்பம் இல்லாத துறைகளுக்குள் அனுப்புகின்றனர்.

இலங்கை பாடசாலைகளில் உயர்தரத்தில் கலைத்துறையில் கற்கின்ற மாணவர்கள் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினை பாடத்தெரிவாகும். ஏனைய துறைகளை பொறுத்தவரை தெரிவு செய்வதற்கு குறைவான பாடங்களே காணப்படுகின்றன. கலை துறையைப் பொறுத்தவரையில் தெரிவு பட்டியலில் அதிகமான பாடங்கள் காணப்படுவதால் இங்கே பாடங்களை தெரிவு செய்வதில் ஒரு சிக்கல்தன்மை காணப்படுகின்றது. பெரும்பாலான பாடசாலைகளில் மரபு ரீதியான வழிகாட்டல்கள் மாத்திரம் காணப்படுவதால் அதிகமான மாணவர்களுக்கு கலைத்துறை பாடங்கள் தொடர்பான போதிய அளவு விளக்கம் கிடைக்கப்பெறுவதில்லை. இதன் காரணமாகவே பெரும்பாலான மாணவர்கள் ஒரே மாதிரியான பாடங்களை தெரிவு செய்கின்றனர். எனவே கலை துறையின் ஊடாக கிடைக்க முடியுமான பல வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள தவறி விடுகின்றனர்.

கலைத்துறையைப் பொறுத்தவரையில் காணப்படுகின்ற இன்னுமொரு முக்கியமான பிரச்சினையாக பெறுபேறுகளின் அடிப்படையில் குறைந்த பெறுபேறுகளை பெறுகின்றவர்கள் கலைத்துறையை தெரிவு செய்கின்ற நிலைமையை குறிப்பிட முடியும். உயர் பெறுபேறுகளை பெறுகின்றவர்கள் விஞ்ஞானம் கணிதம் , தொழில்நுட்பம் போன்ற துறைகளை தெரிவு செய்கின்ற நிலையும் குறைந்த பெறுபேறுகளை பெறுகின்றவர்கள் கலைத்துறைக்கு தகுதியானவர்கள் என்ற மனப்பதிவும் மேற்படி நிலைமைக்கு காரணமாக இருக்க முடியும்.

கலைத்துறை என்பது சமூகத்தின் பண்பாட்டுக் கலாசாரங்களை பேணிப் பாதுகாக்கின்ற ஒரு துறையாக காணப்படுகின்றது. எனவே ஒரு சமூகத்தின் ஓர் இனத்தின் அல்லது ஒரு நாட்டின் கலாசாரங்களையும் பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டுமாயின் கலைத்துறை வலுவான துறையாக மாற வேண்டும். வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகிற்கேற்ப கலைத்துறை மாணவர்களை தகைமை உள்ளவர்களாக மாற்ற வேண்டும்.

கலைத்துறையும் ஒரு சவாலான துறை தான் என்பதை சமூகத்திற்கு உணர வைக்க வேண்டும். அரசாங்கமும் இதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அவர்களுக்கான வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க வேண்டும். கலைத்துறையும் ஓர் அறிவார்ந்த துறைதான் என்பதை சமூக மட்டத்தில் விழிப்புணர்வு செய்யப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமாகத்தான் கலைத்துறை மாணவர்களையும் கலைத்துறையையும் வளர்த்தெடுக்க முடியும்.

# SLT-MOBITEL இனால் அன்பளிப்பு வழங்கலில் மாற்றம்




டிஜிட்டல் தீர்வினூடாக அன்பளிப்பு வழங்கலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக SLT-MOBITEL மற்றும் e-அன்பளிப்பு வவுச்சர் கட்டமைப்பான Thyaga ஆகியன கைகோர்த்துள்ளன. அதனூடாக எந்த நிகழ்வுக்கும் சௌகரியமான மற்றும் சிக்கல்களில்லாத டிஜிட்டல் e-அன்பளிப்பு வவுச்சர்களை கொள்வனவு செய்து அனுப்பும் முறையை அறிமுகம் செய்துள்ளன.

அன்பளிப்பு வவுச்சர்களை சௌகரியமான முறையிலும் பிரத்தியேகமாக மாற்றியமைத்து அனுப்பக்கூடிய வகையிலும், SLT-MOBITEL eTeleshop இல் தற்போது Thyaga இணைந்துள்ளது. இணையத்தளத்துக்கு விஜயம் செய்யும் எந்த நபரும், அன்பளிப்பு வவுச்சர்களை கொள்வனவு செய்து, அன்புக்குரியவர்களுக்கு டிஜிட்டல் முறையில் அனுப்பக்கூடிய வசதிகள் காணப்படுகின்றன. பிறந்தநாள், பிரியாவிடை, பண்டிகைப் பருவகால வாழ்த்துகள், விசேட தினங்கள் போன்றவற்றின் பிரகாரம் வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன.

எங்கிருந்தாலும், நாட்டின் எப்பகுதியில் இருப்பவர்களுக்காகவும் e-அன்பளிப்பு வவுச்சர்களை கொள்வனவு செய்யும் வசதி அடங்கலாக பல்வேறு வசதிகளை Thyaga வழங்குகின்றது.

மேலும், வாடிக்கையாளர்களுக்கு சௌகரியம், பல்துறைசார் அன்பளிப்பு வவுச்சர்களை Thyaga வழங்குகின்றது. அன்பளிப்பு வவுச்சர் கொள்வனவு செய்யப்பட்டதும், அதனைப் பெறுநருக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படுவதையும் உறுதி செய்கின்றது. மின்னஞ்சல் அல்லது SMS வாயிலாக ஏற்கெனவே அட்டவணைப்படுத்தப்பட்ட திகதியில் அல்லது 12 மணி நேரத்துக்குள் கொள்வனவு செய்பவரின் தெரிவுக்கமைய வவுச்சர் அனுப்பப்படும். வாடிக்கையாளர்களுக்கு தமது அன்புக்குரியவர்களுக்கு பொருத்தமான அன்பளிப்பை அனுப்பக்கூடிய நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவது இலக்காக அமைந்துள்ளது.

அத்துடன், Thyaga இன் அன்பளிப்பு வவுச்சர்களை எந்நேரத்திலும், எந்நாளிலும் அவர்களின் பங்காளர் விற்பனை வலையமைப்புகளில் பயன்படுத்த முடியும். பெறுநருக்கு தாம் பயன்படுத்த எதிர்பார்க்கும் பெறுமதியை தெரிவு செய்து கொள்ளும் வசதியும் காணப்படுவதுடன், வவுச்சர் பெறுமதி முழுமையாகப் பயன்படுத்தப்படும் வரையில் அதனை பகுதியளவில் அல்லது முழுமையாக பயன்படுத்தலாம். சிக்கல்களில்லாத அன்பளிப்பு வழங்கும் முறை, பாரம்பரிய முறையை விட மிகவும் சௌகரியமானதாக அமைந்துள்ளது.

SLT-MOBITEL குழும பிரத சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “நுகர்வோருக்கு பொருத்தமான டிஜிட்டல் வவுச்சர்கள் மற்றும் அன்பளிப்பு கார்ட்கள் ஆகியவற்றை அறிமுகம் செய்வதற்கான சிறந்த காலமாக இதனை நாம் கருதுகின்றோம். இந்தப் பங்காண்மையினூடாக, இலங்கையின் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற மற்றும் பாவனையாளர்-நட்பான அன்பளிப்பு வழங்கும் அனுபவத்தை வழங்க முடிந்துள்ளது. eteleshop.slt.lk ஊடாக அன்பளிப்பு வழங்குநர்களுக்கு வவுச்சர்களை இலகுவாக கொள்வனவு செய்ய முடியும் என்பதுடன், அவற்றை தமது அன்புக்குரியவர்களுக்கு மின்னஞ்சல் அல்லது SMS ஊடாக அனுப்பவும் முடியும். அன்பளிப்பை கொள்வனவு செய்ய குறைந்தளவு நேரத்தை கொண்டிருப்பவர்களுக்கு அல்லது பாரம்பரிய அன்பளிப்பு விற்பனை நிலையங்களில் அதிகளவு சனநெரிசலை எதிர்கொள்ள விரும்பாதவர்களுக்கு இது சிறந்த தெரிவாக அமைந்துள்ளது” என்றார்.

Thyaga பிரதம நிறைவேற்று அதிகாரி சச்சின் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையின் மேலும் அதிகளவான மக்களுக்கு எமது e-அன்பளிப்பு தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக SLT-MOBITEL உடன் கைகோர்த்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநருடன் எமது பங்காண்மையினூடாக, அவர்களின் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை பயன்படுத்த எமக்கு வசதி வழங்கப்பட்டுள்ளதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற மற்றும் சௌகரியமான அன்பளிப்பு வழங்கல் அனுபவத்தை பெற்றுக் கொடுக்கவும் உதவியுள்ளது. அன்பளிப்பு வழங்கல் கலையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஒரு முன்நோக்கிய படியாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளதுடன் அனைவருக்கும் இலகுவாக அணுகக்கூடிய வகையில் அமைந்திருக்கும்” என்றார்.

# oDoc இடமிருந்து oLife அறிமுகம்




oDoc ஆனது oLife எனும் மருத்துவ ஆலோசனைக்கான செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இச் செயலியானது வாழ்க்கையின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அனுபவமிக்க நிபுணர்களால், விரிவான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கை பன்முகத்தன்மை கொண்டதென்பதை புரிந்துகொண்டு மருத்துவ ஆலோசனைகளுக்கு அப்பால் நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளும் தளமாக oLife மெய்நிகர் ஆலோசனை செயலி செயற்படுவதை நோக்கமாக கொண்டுள்ளது. பயனர்களின் மேம்பட்ட வாழ்க்கை முறைக்கு பொருத்தமான பரிபூரணமான வழிகாட்டல்கள், ஆலோசனைகளை விரல் நுனியில் பெற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பயனர்களின் பிரத்தியேக வளர்ச்சி மற்றும் நலனை கருத்தில் கொண்டு ஆதரவை வழங்கக்கூடிய அனுபவம் வாய்ந்த நிபுணர் குழுவை அணுகுவதனூடாக நிதி ஆலோசனை, உறவு மற்றும் திருமண ஆலோசனை, உடல் தகைமை, ஆரோக்கியம், இசை ஆலோசனை, வாழ்க்கை பயிற்சி, நலன் பேணல் பிரிவுகளில் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

oLife நிபுணர் குழுவானது மக்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உயர் தகைமை வாய்ந்த ஆலோசகர்கள் நிபுணத்துவம், துறைசார் அறிவு மற்றும் அர்ப்பணிப்பு போன்றன உறுதி செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நிபுணர்களுடன் மெய்நிர் முறையில் தொடர்பு கொண்டு பிரத்தியேக தேவைகளுக்கு பொருத்தமான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய கட்டமைப்பை அறிமுகம் செய்துள்ளதையிட்டு oLife பெருமை கொள்கின்றது.

தமது பாவனையாளர்களுக்கு நட்பான உட்கட்டமைப்புடன் oLife இனால் பல்வேறு பிரிவுகளின் கீழ் சேவைகள் வழங்கப்படுவதோடு பாவனையாளர்ளுக்கு தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய ஆலோசனையாளர்களை அணுகக்கூடிய வசதியை வழங்குகின்றது. இத்தளமானது பயனர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் இரகசியதன்மை என்பன பாதுகாக்கப்படுவதோடு சகல மெய்நிகர் ஆலோசனைகளும் இரகசியமான முறையில் இடம்பெறுவதை உறுதியளிக்கின்றது.

அணுகலை மேம்படுத்தும் வகையில் oLife இனால் ஒப்பற்ற கொடுப்பனவு தெரிவுகள் காணப்படுவதோடு அதனூடாக ஆலோசகர்களுக்கு சிக்கலில்லாத கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள முடியும். இதனூடாக அநாவசிய தடங்கல்கள் மற்றும் சிக்கல்கள் தடுக்கப்படுவதோடு பாவனையாளர்கள் தங்களது வளர்ச்சி, மகிழ்ச்சி, நலனை கருத்தில் கொள்ள முடியும்.

oLife இன் பிரதம நிறைவேற்று அதிகாரி நபில் மில்ஹான் கருத்து தெரிவிக்கையில், “பிரத்தியேக வளர்ச்சி மற்றும் நலன்பேணல் ஆகியவற்றில் புரட்சியை தூண்டி வருகின்றோம். நாம் வாழும் வாழ்க்கையை போல, நிபுணர் ஆலோசனைக்கான அணுகலும் வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் இத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. oLife மூலம் தனிநபர்கள் மற்றும் நிபுணர்களின் வழிக்காட்டுதலுக்கு இடையிலான தடைகளை உடைத்து, எல்லைகளை விரிவுபடுத்துகின்றோம். எங்கள் பயனர்கள் ஆலோசனைகளை மட்டும் பெற்றுக்கொள்ளவில்லை. மாறாக ஒவ்வொரு சவாலின் போதும் அவர்களுக்கு ஆதரவை வழங்கக்கூடிய சமூகத்தில் அங்கம் பெற்று வாழ்க்கை பயணத்தில் வெற்றி பெறுகிறார்கள்” என்றார்.

oDoc பயனர்களை, oLife இனூடாக உலகத்தை ஆராயவும் வித்தியாசத்தை அனுபவிக்கவும் அழைக்கின்றது. oLife இயங்குதளம் oDoc செயலியில் பெற்றுக் கொள்ள முடியும். பயனர்கள் சுயவளர்ச்சி மற்றும் நிறைவை கண்டறியும் பயணத்தை ஆரம்பிப்பதோடு, உண்மையான திறன் மற்றும் நல்வாழ்வை oLife மூலம் அமைத்துக் கொள்ளலாம்.

# குழந்தை பெற்றால் ஊக்கத்தொகை

சீனாவில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், 'ஒரு குடும்பம், 3 குழந்தைகள்' திட்டத்தை சீன அரசு அறிமுகம் செய்திருக்கிறது.

சீனாவில் குழந்தை பிறப்பை அதிகரிக்க அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றது. சீன அரசின் அறிவுறுத்தலின்படி தனியார் நிறுவனங்களும் சலுகைகளை அறிவித்து வருகின்றன.

இந்நிலையில், சீனாவின் ஷாங்காய் நகரை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் டிரிப் டாட் காம் குரூப் லிமிடெட் நிறுவனத்தின் செயல் தலைவர் ஜேம்ஸ் லியாங் கூறியதாவது:

எங்கள் நிறுவன ஊழியர்களின் ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டுதோறும் ரூ.1.13 இலட்சத்தை ஊக்கத் தொகையாக வழங்குவோம்.



குழந்தை பிறந்தது முதல் தொடர்ச்சியாக 5 ஆண்டுகளுக்கு குழந்தைக்கு ஊக்கத் தொகையை அளிப்போம். ஒட்டுமொத்தமாக ஒரு குழந்தைக்கு ரூ.5.65 லட்சத்தை ஊக்கத் தொகையாக வழங்குவோம். ஒரு ஊழியர் எத்தனை குழந்தைகளை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். அத்தனை குழந்தைகளுக்கும் 5 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக ஊக்கத்தொகையை வழங்குவோம் என்றார்.

பிரான்ஸ்



# வன்முறையை அடுத்து 3]2,300 பேர் கைது

பிரான்சில் 17 வயது சிறுவன் பொலிஸாரால் என்கவுண்டர் செய்யப்பட்டதால் அந்நாடே கடந்த சில நாட்களாக வன்முறைக் காடாக மாறியுள்ளது. அங்கு வன்முறை மெல்லமெல்ல குறைந்துவரும் சூழலில் சிறுவனின் இறுதிச்சடங்குகள் பெரிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி அமைதியாக நடந்து முடிந்துள்ளன.

ஆனால், மற்ற இடங்களில் நீடிக்கும் வன்முறையில் கடைக்குள் புகுந்து வன்முறையாளர்கள் துப்பாக்கிகளை திருடிச் சென்றது அந்நாட்டில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நீடிக்கும் வன்முறை தொடர்பாக இதுவரை 2,300-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். நிலைமையைக் கட்டுப்படுத்த தலைநகர் பாரிஸ் புறநகர் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### ட்விட்டர் பயனர்களுக்கு

# ஷாக் கொடுத்த எலான்

பிரபல சமூக வலைதளமான டிவிட்டரில், சனிக்கிழமை (01) இரவு முதல் பதிவுகளை சரியாக பார்க்க முடியவில்லை என்று பயனாளர்கள் குற்றம்சாட்டினர். மேலும், டிவிட்டர் சேவை முடங்கியதாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில், டிவிட்டரில் தற்காலிகமாக புதிய கட்டுப்பாடுகளை விதித்து இருப்பதாக எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

அதன்படி, சந்தா செலுத்திய அதிகாரப்பூர்வ பயனாளர்கள் (Verified accounts) நாளொன்றுக்கு 6 ஆயிரம் பதிவுகளை படிக்க முடியும். சந்தா செலுத்தாமல் நீண்ட நாட்களாக டிவிட்டரை (Unverified ) பயன்படுத்துவர்கள், ஒரு நாளைக்கு 600 பதிவுகளை மட்டுமே வாசிக்கலாம். மேலும், புதிதாக டிவிட்டருக்குள் நுழைபவர்கள், நாளொன்றுக்கு 300 பதிவுகளை மட்டுமே பார்க்க முடியும்.

அதிக அளவிலான தரவுகள் வீணாவதை தவிர்க்கும் நோக்கில் இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கு நான்காம் இடம்

சமீபத்தில் நடத்தப்பட்ட மொழிகள் குறித்த ஆய்வின் படி உலகளவில் 7 நாடுகளில் அதிக மொழிகள் மற்றும் பண்பாடுகள் உள்ளனவென மொழிகளை ஆய்வு செய்யும் எத்னலோக் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பசிபிக் கடலில், சுமார் 4,62,840 கிலோ மீட்டர் பரப்பளவுடன் தீவு நாடுகளில் மூன்றாவது பெரிய நாடாக பப்புவா நியூ கினி உள்ளது. இங்கு டொக் பிசின், கிரி மற்றும் மோட்டு என இந்த 3 அதிகாரப்பூர்வ மொழிகளுடன் 840 மொழிகள் பேசப்படுவதோடு உலகளவில் அதிக மொழி பேசும் பட்டியலில்



முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

உலகளவில் அதிக மொழி பேசும் நாடுகளில் இரண்டாவது இடத்தில் இந்தோனேசியா உள்ளது. இந்த நாட்டின் ஆட்சி மொழியாக இந்தோனேசியன் இருந்தாலும், இந்நாட்டில் மொத்தம் 715 மொழிகள் பேசப்படுகிறது.

பட்டியலில் மூன்றாம் இடத்தில் நைஜீரியா உள்ளது. 200 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நைஜீரியா, ஆப்பிரிக்காவின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடு மற்றும் அதன் மிகப்பெரிய ஜனநாயகம் நாடாக உள்ளது.

பல கலாசாரங்கள் மற்றும் மொழிகளை கொண்ட நாடாக இந்தியா உள்ளது. எத்னோலாஜின் படி, இந்தியா பட்டியலில் 456 மொழிகளுடன் நான்காம் இடத்தில் உள்ளது.

புதுடெல்லி

# பாலியல் உறவை தவிர்ப்பது கொடுமைப்படுத்தும் செயல்

திருமணமான தம்பதியில் ஒருவர் மற்றொருவருடன் வேண்டுமென்றே பாலியல் உறவை தவிர்ப்பது மனரீதியான கொடுமைபடுத்தும் செயல் என புதுடெல்லி நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

2014இல் திருமணமான ஜோடி ஒன்றின் விவாகரத்து வழக்கு புதுடெல்லி நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இதை விசாரித்த புதுடெல்லி குடும்பநல நீதிபதி விபின் குமார் ராய் இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்தார். விசாரணையில் அந்த பெண் மெட்ரிமோனி தளத்தின் மூலமாக பார்த்து பிடித்து போய் திருமணம் செய்துள்ளார்.

இந்நிலையில், திருமணமானதில் இருந்த அந்த பெண் கணவருடன் பாலியல் உறவு மேற்கொள்வதை தொடர்ந்து தவிர்த்து வந்தார். திருமணத்திற்கு முன்பே இவர்கள் 13 மாதங்கள் பேசி பழகி அறிமுகமானவர்கள். இப்படியே பல மாதங்கள் கழிந்த நிலையில், ஒரு கட்டத்தில் விரக்தி அடைந்த கணவர் நீதிமன்றத்தில் விவாரத்து வழக்கு தொடர்ந்தார். கணவர் தரப்பு எதிராக வாதாடிய பெண்ணின் தரப்பினர், உடலுறவு என்றாலே அச்சத்திற்கு ஆளாகும் ஜீனோபோபியா நோய் அந்த பெண்ணுக்கு இருப்பதாக வாதாடினர்.

வாதங்களை கேட்ட நீதிபதி விபின் குமார் ராய் தனது தீர்ப்பில், "இயல்பான ஆரோக்கியமான பாலியல் உறவு என்பது மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையின் அடிப்படை அங்கமாகும். வேண்டுமென்றே தனது இணையுடன் பாலியல் உறவை தவிர்ப்பது என்பது மற்றொரு நபரை மன ரீதியான கொடுமைக்கு ஆளாக்கும் செயல். குறிப்பாக இருவரும் இளம் ஜோடியாக இருக்கின்றீர்கள்.

சுயமாக தனது கணவரை தேர்வு செய்து திருமணத்திற்கு முன்பு பேசி அறிமுகமான பின்னர் குடும்ப வாழ்க்கையில் பாலியல் உறவை தவிர்பதை ஏற்க முடியாது" என்ற நீதிபதி, கணவரின் கோரிக்கையை ஏற்று விவாகரத்து கொடுத்து தீர்ப்பளித்தார்.



### உலகக் கிண்ணத்துக்கு

# தகுதி பெறத் தவறிய மேற்கிந்தியத் தீவுகள்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத்துக்கு மேற்கிந்தியத் தீவுகள் தகுதி பெறத் தவறியுள்ளது.

ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்கொட்லாந்துடனான உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளின் சுப்பர் சிக்ஸ் போட்டியில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற மேற்கிந்தியத் தீவுகள் தவறியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஸ்கொட்லாந்து

மே. தீவுகள்: 181/10 (43.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேஸன் ஹோல்டர் 45 (79). றொமாரியோ ஷெப்பர்ட் 36 (43) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரண்டன் மக்முல்லன் 3/32, மார்க் வாட் 2/25, கிறிஸ் கிரேவ்ஸ் 2/30, கிறிஸ் சோல் 2/43, ஃபயான் ஷரிஃப் 1/16)

ஸ்கொட்லாந்து: 185/3 (43.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: மத்தியூ குறொஸ் ஆ.இ 74 (107), பிரண்டன் மக்முல்லன் 69 (106) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகீல் ஹொஸைன் 1/26, றொமாரியோ ஷெப்பர்ட் 1/28, ஜேஸன் ஹோல்டர் 1/37)

போட்டியின் நாயகன்: பிரண்டன் மக்முல்லன்



### கல்முனை வலய மட்ட எல்லேயில்

# சம்பியனானது சாஹிரா

அஸ்ஹர் இப்றாஹீம்

கல்முனை வலய மட்ட எல்லேயில் சாஹிரா தேசியக் கல்லூரி சம்பியனானதுடன், கிழக்கு மாகாண மட்ட போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளது.

சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஏழு ஓட்டங்களால் அல் பஹ்ரியா மகா வித்தியாலத்தை (தேசிய பாடசாலை) வீழ்த்தியே சாஹிரா சம்பியனானது.



# துராமைக் கைச்சாத்திட்ட இன்டர் மிலன்

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பொரூசியா மொச்சென் கிளெட்பாவின் முன்களவீரரான மார்க்கஸ் துராமைக் கைச்சாத்திட்டுள்ளதாக இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

கிளெட்பாவுக்காக 134 போட்டிகளில் 44 கோல்களைப் பெற்ற 25 வயதான துராம், 29 கோல்களைப் பெற உதவியுள்ளார்.



# ஓய்வு பெற்ற சீஸ்க் பப்ரிகாஸ்

கால்பந்தாட்டத்திலிருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்னாள் மத்தியகளவீரரான சீஸ்க் பப்ரிகாஸ் அறிவித்துள்ளார்.

ஸ்பெய்னுடன் உலகக் கிண்ணத்தை வென்ற 36 வயதான பப்ரிகாஸ், செல்சியுடன் இரண்டு தடவைகள் பிறீமியர் லீக்கை வென்றதுடன், பார்சிலோனாவுடன் ஒரு தடவை லா லிகாவையும் வென்றிருந்தார்.



# வெயாவைக் கைச்சாத்திட்ட ஜுவென்டஸ்

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான லில்லியிலிருந்து முன்களவீரரான திமோதி வெயாவை இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் கைச்சாத்திட்டுள்ளது.

லில்லிக்காக 102 போட்டிகளில் எட்டு கோல்களை 23 வயதான வெயா பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 03 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.